

# ඉස්ලාමීය අන්තවාදය :
## ශිෂ්ටාචාර අතර ගැටුමක්ද ?
## ශිෂ්ටාචාරය ඇතුළත ගැටුමක්ද ?

# இஸ்லாமியத் தீவிரவாதம் :
## நாகரிகங்களுக்கிடையிலான மோதலா?
## நாகரிகத்துக்குள்ளான மோதலா?

# Islamic Extremism :
## Clash of Civilizations or Clash within Civilization?


**Vidura Prabath Munasinghe**
**Kaushalya Ariyarathne**

# ඉස්ලාමීය මූලධර්මවාදය :

ශිෂ්ටාචාර අතර ගැටුමක්ද ?
ශිෂ්ටාචාරය ඇතුළත ගැටුමක්ද ?

# இஸ்லாமியத் தீவிரவாதம் :

நாகரிகங்களுக்கிடையிலான மோதலா?
நாகரிகத்துக்குள்ளான மோதலா?

# Islamic Extremism :

Clash of Civilizations or
Clash within Civilization?

**Islamic Extremism :**
Clash of Civilizations or
Clash within Civilization?

**© Law & Society Trust, 2019**
ISBN 978-1955-1302-79-5

The Law & Society Trust (LST) is a not-for-profit organisation engaged in human rights documentation, legal research and advocacy in Sri Lanka. Our aim is to use rights-based strategies in research, documentation and advocacy in order to promote and protect human rights, enhance public accountability, and ensure respect for the rule of law.

**Vidura Prabath Munasinghe**

**Kaushalya Ariyarathne**

Cover Design & Layout : Prabath Hemantha Kumara

Published by :

**Law & Society Trust**
3, Kynsey Terrace,
Colombo 8,
Sri Lanka
Tel : +94 (0) 11 268 48 45
Fax : +94 (0) 11 268 68 43
Web : www.lstlanka.org

# ඉස්ලාමීය මූලධර්මවාදය :

## ශිෂ්ටාචාර අතර ගැටුමක්ද ?
## ශිෂ්ටාචාරය ඇතුළත ගැටුමක්ද ?

විදුර ප්‍රභාත් මුණසිංහ
කෞෂල්‍යා ආරියරත්න

මෙම ප්‍රකාශනය 'නව සමාජ පරිකල්පන' ව්‍යාපෘතිය යටතේ ප්‍රකාශයට පත්කිරීමට තෝරාගත් ලන්ඩන් විශ්වවිද්‍යාලයේ ගෝල්ඩ්ස්මිත් කොලේජ් හි ආචාර්ය කිරන් ග්‍රෙවාල් වෙත සහ මෙහි මුල් පිටපත කියවා අදහස් දැක්වූ නීතිය හා සමාජ භාරයේ විධායක අධ්‍යක්ෂ ආචාර්ය සකුන්තලා කදිර්ගාමර් සහ එම ආයතනයේ වැඩසටහන් හා මෙහෙයුම් අධ්‍යක්ෂ සඳුන් තුඩුගල වෙත මෙම ප්‍රකාශනයේ කතුවරුන්ගේ ස්තුතිය පිරිනැමේ. එමෙන්ම ස්වේච්ඡාවෙන්ම මෙහි ඉංග්‍රීසි සහ දෙමළ පිටපත් කියවා සංස්කරණය කළ ඔලිවර් ෆ්‍රීඩ්මන් සහ එම්. සී. රස්මින් වෙත ද දෙමළ පිටපතේ සෝදුපත් බැලූ විජයකාන්ත් මාඩසාමි වෙත ද කතුවරුන්ගේ විශේෂ ස්තුතිය පිරිනැමේ.

# පෙරවදන

අපි තවමත් 2019 අප්‍රේල් 21 දින මෙරට සිදුවූ අතිශය අමානුෂික මරාගෙන මැරෙන බෝම්බ ප්‍රහාරයන්ගේ කම්පනයට පත්ව සිටිමු.[1] මනුෂ්‍යයින් ලෙස විපතේදී හැඟීම්බර වීම සාමාන්‍ය දෙයක් වන නමුත්, එකී හැඟීම් මත පදනම්ව ගනු ලබන ක්ෂණික ප්‍රතිචාරයන් අපට අත්කර දී ඇත්තේ යහපත් ප්‍රතිඵලයන් නොවන බවට අපගේ මෑත කාලීන ඉතිහාසය සාක්ෂි දරයි. 1983 එහිදී අපට අමතක වීමට තරම් සිවිල් යුද්ධය අවසන්ව ගෙවී ගිය දශකය ප්‍රමාණවත් නොවේ. හැඟීම්බරව සොයන පිළිතුරට වඩා ගැඹුරින් සිතා බැලීම දිගින් දිගටම පැහැර හරිමින් සිටි හා සිටින සමාජයකට අපි මේ මොහොතේ එතරම් ආකර්ෂණීය නොවන එකී දුෂ්කර කාර්යයම යෝජනා කර සිටිමු.

---

1. මෙම ලිවීම ලියන ලද්දේ දිවයිනේ කතෝලික දේවස්ථාන හා සංචාරක හෝටල් ගණනාවකට මරාගෙන මැරෙන බෝම්බ ප්‍රහාර එල්ල වූ 2019 අප්‍රේල් 21 දිනයෙන් අනතුරුව එළැඹි දින කිහිපයේය. එම ප්‍රහාරයන්ගෙන් 253 දෙනකු පමණ මියගිය අතර 500කට ආසන්න පිරිසක් තුවාල ලැබූහ.

# හැඳින්වීම

අප්‍රේල් 21 දින ප්‍රහාරයන්හි වගකීම ISIS සංවිධානය විසින් භාරගෙන තිබේ. මීට පෙර ISIS ලෙස අප දුටුවේ මැද පෙරදිග කලාපයේ ක්‍රියාත්මක වූ, විවිධ බටහිර හා අප්‍රිකානු කලාපයේ රටවල මරාගෙන මැරෙන ප්‍රහාර එල්ල කළ ත්‍රස්ත සංවිධානයකි. පසු කාලීනව ඉරාකය හා සිරියාව වැනි මැද පෙරදිග සමහර රටවල ඔවුන්ගේ ක්‍රියාකලාපය පිළිබඳව අප ඇසූ පුවත් අපව තිගැස්මට ලක්කරන ලදී. එකී සමහර වීඩියෝවන්හි දැක්වෙන දේ අප ශිෂ්ඨත්වය යැයි විශ්වාස කරන බොහොමයක් මතිමතාන්තරයන් අභියෝගයට ලක් කරයි. වරක අප දකින්නේ ඔවුන්ගේ ග්‍රහණයට හසුවූ පිරිමින් විශාල ගණනාවක් පේළියට තබා ගෙල කපා මරා දමන ආකාරය යි. තවත් ප්‍රවෘත්තියක ඔවුන්ගේ ග්‍රහණයෙන් මිදී පැන ආ දැරියක් ඔවුන් විසින් පාලනය කරන ප්‍රදේශයන්හි කාන්තාවන් හා ගැහැණු දරුවන් ලිංගික වහලුන් ලෙස යොදාගනු ලැබූ ආකාරය විස්තර කරයි. අන්තර්ජාලය ඔස්සේ සංසරණය වන තවත් එක් වීඩියෝවක දැක්වුනේ ඉරාකයේ මොසුල් නගරයේ ඉපැරණි නටබුන් හා කලාකෘතීන් ඔවුන්ගේ කුළුගෙඩි පහරින් බිඳ හෙළන ආකාරයයි. මේ සියල්ල අප ශිෂ්ඨත්වය යැයි සලකන සම්මතයන්ට ඔබ්බෙන් වූ අපට අර්ථයට

නංවාගත නොහැකි ක්‍රියාකාරකම්ය. 21 දා පළමු වරට ශ්‍රී ලංකාව තුළ අප අත්දකින ලද්දේ එවැන්නකි. කිසිසේත්ම කුමකටදැයි අපට වටහාගත නොහැකි හේතුවකට අහිංසක ගැහැණුන්, මිනිසුන්, දරුවන් මරා දැමීම අපව ක්ෂතියට පත්කොට ඇත. එදා අප රූපවාහිනී තිරවල අප දුටු ම්ලේච්ඡත්වය අද අපේ එදිනෙදා ජීවිතය වෙත කඩා වැදී ඇත. ඇත්තෙන්ම අපගේ ජීවිතවල පදනම වන්නේ යැයි අප විශ්වාස කරන සදාචාර ධර්මතාවන් මෙතරම් තිරශ්චීන ලෙස උල්ලංඝණය කරන ලෝකයක් අප හමුවේ දිගහැරෙමින් පවතින්නේ කෙසේද? මෙය අප වටහා ගන්නේ කෙසේද?

මේ පැනයට මීට දශක කිහිපයක සිට ඉදිරිපත් වන එක්තරා ජනප්‍රිය හා පහසු පිළිතුරක් ඇත. එනම් මේ වූ කලි අප ජීවත්වන ශිෂ්ටාචාරයට වඩා වෙනස් ධර්මතාවයන් මත නිර්මාණය වූ ශිෂ්ටාචාරගත පිරිසකගේ ක්‍රියාකාරකම්ය යන්නය. ඇත්තෙන්ම මෙය සැනසිලිදායක පිළිතුරකි. ඔවුන් අප වැනි අය නොවන බව දැන ගැනීමම අස්වැසිල්ලකි. අනෙක් අතින් එකී ඉස්ලාම් ශිෂ්ටාචාරයට විරුද්ධ ආස්ථානයක අපව පිහිටුවා ගැනීමට එමඟින් ඉඩ හසර විවර කරවයි. දැන් අපේ අසල්වැසි මුසල්මානුවා ද එකී

පිටස්තර ශිෂ්ටාචාරයේ කොටස්කරුවෙකි. දැන් ඔවුන්ගේ ඇඳුම පැළඳුම, දේහ විලාසිතාවන්, ජීවන විලාසයන්, අභිචාර විධීන් යන සියල්ලම අපේ නොවන ශිෂ්ඨත්වයක්, එනම් අශිෂ්ඨත්වයක් ලෙස සලකා බැහැර කරමින් පවතී. ''ඊළඟ ආත්මයේ සතෙක් වුනත්, තම්බියෙක් නම් වෙන්න එපා'' යනුවෙන් දක්වුනු පෝස්ටුවක් මුහුණු පොතේ ඉතා ජනප්‍රිය ලෙස සංසරණය වෙමින් පැවතිණ. දැන් මුස්ලිම් නොවන මුහුණු පොතේ ප්‍රජාව අතර ජනප්‍රියව ඇති පරිදි මුස්ලිම්වරු තම දරුවන් ද සමඟින් පුපුරවා ගන්නේ මරණින් මතු පාරාදීසයේ කන්‍යාවියන් හැත්තෑ දෙදෙනකු සමඟ කම් සැප විඳිනු පිණිසය. නමුත් අපට මේ මොහොතේ අමතකව ගොස් ඇති කාරණය වන්නේ මේ මුසල්මානුවා වසර සිය ගණනක් තිස්සේ අපගේ සමාජයේ අප හා ජීවත් වූවකු වන බවයි. එකල ඔවුන් සම්බන්ධයෙන් මෙවැනි ගැටළුවක් අපට නොතිබිණ. හදිසියේම ඔහු අපේ ශිෂ්ටාචාරයෙන් බැහැර අයකු බවට පත්වූයේ කෙසේද? එසේ නම් අප සියවස් ගණනක් එක්ව ජීවත් වූයේ කෙසේද? නොඑසේනම් මේ ආඛ්‍යානය අලුතින් බිහිවූවක්ද? එසේනම් එකී ආඛ්‍යානය කාගේ නිෂ්පාදනයක්ද? ඒ පසුපස ඇති දේශපාලනික වුවමනාවන් හා ඓතිහාසික තත්ත්වයන් මොනවාද? එවැනි ආඛ්‍යානයන් පිළිගැනීම විසින් අපට

අත්කර දෙන වාසි/අවාසි මොනවාද? එය කවුරුන් විසින් හෝ නිර්මාණය කරන ලද ආඛ්‍යානයක් නම් 21 වන දින සැබවින්ම සිදුවූයේ කුමක්ද? ඔවුන් ඇත්තටම ශිෂ්ඨ යැයි සම්මත ලෝකයේ කවරකුට හෝ පිළිගත නොහැකි ම්ලේච්ඡ ක්‍රියාවක නියැලුණා නොවේද?

මේ ලිවීමේ අරමුණ ඉහත කී ප්‍රශ්න අභිමුඛ කරවන සංවාදයක වැදගත්කම අවධාරණය කිරීමයි. මේ ක්ෂතිමය මොහොතේ එවැන්නක් සිතාගැනීම පවා එතරම් පහසු නොවන තත්ත්වයකදී පවා, අප විසින් එවැන්නක් ඇරඹිය යුතුව ඇත්තේ ඒ අප ඉදිරිපිට දිගහැරීමට නියමිත නව යථාර්ථයන් වටහා ගැනීමට එම සංවාදය අතිශයින් තීරණාත්මක වන බැවිනි. එබැවින් අසීරුවෙන් හෝ මේ මොහොතට දුරස්ථ යැයි සිතෙන තරමක වියුක්ත සාකච්ඡාවකින් මෙම සංවාදය ආරම්භ කරමු.

## ශිෂ්ටාචාර අතර ගැටුම

ශිෂ්ටාචාර අතර ගැටුම පිළිබඳ අදහස මුල්වරට ඉදිරිපත් කෙරුණේ 1993 දී සැමුවෙල් හන්ටිංග්ටන් විසින් '*Foreign Affairs*' සඟරාව සඳහා ලියන ලද *The Clash of Civilizations?* නම් ලිපියෙනි. පසුව ඔහු විසින් එය

පොතක් ලෙස වැඩිදියුණු කොට 1996 දී ප්‍රකාශයට පත්කරනු ලැබිණි. ඔහු සිය ලිපිය ආරම්භ කරන්නේ 'ලෝක දේශපාලනය නව අදියරක් කරා පිවිස ඇති' බව පවසමිනි. ඔහු මේ ප්‍රකාශයට පත්කිරීම සිදුකරන්නේ ශීත යුද්ධය අවසන් වූ සන්දර්භයකය. 1992 දී ඔහුගේම ශිෂ්‍යයකුවූ ෆ්‍රැන්සිස් ෆුකුයාමා සිය *The End of History and the Last Man* කෘතිය පළකරමින් ඉතිහාසය අවසන් බව ප්‍රකාශයට පත්කොට තිබිණි. ශීත යුද්ධය පැවැති කාලයේ ලෝකයේ ගැටුම් ප්‍රධාන කොටම පැවතියේ දෘෂ්ඨිවාදී බල කඳවුරු දෙක අතර ය. හන්ටිංග්ටන් සිය ශිෂ්ටාචාර අතර ගැටුම පිළිබඳ තිසීසය ඉදිරිපත් කරන්නේ මෙකී ගැටුම අවසානයකට පත්වූ සන්දර්භකය. ඔහු මෙසේ ලියයි:

> "මේ නව ලෝකයේ ගැටුමේ මූලික මූලාශ්‍රය දෘෂ්ඨිවාදී හෝ ආර්ථිකමය වූවක් නොවේය යන්න මගේ උපන්‍යාසයයි. (මේ යුගයේ) මිනිස් වර්ගයා අතර බලවත් බෙදීම් ඇති කරන්නේත්, ගැටුම්වල ප්‍රධාන මූලාශ්‍රය වන්නේත් සංස්කෘතියයි... ශිෂ්ටාචාර අතර ගැටුම ලෝක දේශපාලනයේ ප්‍රමුඛතම සාධකය වනු ඇත" (හන්ටිංග්ටන් 1993:22).

ඔහු ලෝකය ශිෂ්ටාචාර නවයකට බෙදා දක්වයි (හන්ටිංග්ටන් 1996:27-8).




**බටහිර** **ඉස්ලාමී** **හින්දු** **ලතින් ඇමරිකානු**
**සාධාර්මික (*Orthodox*)** **බෞද්ධ** **අප්‍රිකානු** **චීන**
**ජපන්**

එහිදී ඔහු පවසා සිටින්නේ ප්‍රධානතම දේශපාලනික ගැටුම ගොඩනැගෙන්නේ බටහිර හා බටහිර නොවන ශිෂ්ටාචාර අතර වන බවයි. එහිදී ද ඉස්ලාමීය ශිෂ්ටාචාරය ඔහු අන් කවර ශිෂ්ටාචාරයකට වඩා එදිරිවාදී ආකල්පයකින් සාකච්ඡා කරයි.

ඔහු දක්වන ආකාරයට බටහිර තනි ශිෂ්ටාචාරයක් නියෝජනය කරයි. ඇමරිකා එක්සත් ජනපදය, කැනඩාව, බටහිර හා මධ්‍යම යුරෝපය හා ඕෂනියාව එකී බටහිර

ශිෂ්ඨාචාරයට අයත්ය. මෙම ශිෂ්ටාචාරය ක්‍රිස්තියානිය, ප්‍රබුද්ධත්වය, කාර්මීකරණය හා නූතනත්වය විසින් ගොඩනංවනු ලැබ ඇත. මේ බටහිර ශිෂ්ටාචාරයට සපුරා පටහැනි ශිෂ්ටාචාරය ලෙසින් ඔහු දකින්නේ ඉස්ලාම් ශිෂ්ටාචාරය යි. බර්නාඩ් ලුවිස් අනුව යමින් හන්ටිංග්ටන් උපකල්පනය කරන්නේ මීළඟ නව ලෝක පර්යාය සඳහා වන සටන ඇතිවනු ඇත්තේ බටහිර ශිෂ්ටාචාරය හා ඉස්ලාම් ශිෂ්ටාචාරය අතර බවය. මේ ගැටුම කුරුස යුද්ධ කාලය දක්වා විහිදුනු අවුරුදු 1300 කට වඩා ඉපැරණි වූවක් බව ඔහු කියයි.

> "..මෙය ශිෂ්ටාචාර අතර ගැටුමක් මිස අන් යමක් නොවේ... මේ වූ කලි අපගේ ඉපැරණි එදිරිවාදීත්වය වන යුදෙව්-ක්‍රිස්තියානි උරුමයට, අපගේ අනාගමික (*secular*) වර්තමානයට සහ ඒ දෙකෙහිම ලෝක පරිමාණ ව්‍යාප්තියට එරෙහි ප්‍රතිචාරයකි" (ලුවිස් 1990:28).

මේ ගොඩනඟන තිසීසයට අනුව සියලුම බටහිර රටවල් මේ ක්‍රිස්තියානි අතීත උරුමය, නූතනත්වය, ප්‍රබුද්ධත්වය (*Enlightenment*), කාර්මීකරණය හා අනාගමිකත්වය නියෝජනය කරයි. ශිෂ්ටාචාර අතර බලවත්ම ගැටුම ඇතිවන්නේ එකී ගුණාංගයන් දරා සිටින්නා වූ හා එහි

ආරක්ෂකයා වූ බටහිර ශිෂ්ටාචාරය හා ඉස්ලාම් ශිෂ්ටාචාරය අතර නම් සියලුම ඉස්ලාම් රටවල් බටහිර රටවල් දරා සිටින බටහිර වටිනාකම් හි පරස්පරය නියෝජනය කරන්නේ යැයි උපකල්පනය කිරීමට සිදුවේ. මේ තිසීසයට අනුව තම ලබ්ධියට අයත් නොවන්නන් තිරශ්චීන ලෙස මරා දැමීම, තම ඇදහිල්ලට පිටත කලාකෘති හා ඓතිහාසික උරුමයන් විනාශකොට දැමීම ශිෂ්ටාචාර අතර ගැටුම යන සංකල්පගත කිරීම තුළ පිහිටුවාලිය හැකි වේ. නමුත් මේ සංකල්පගත කිරීම තුළ ඇති දේශපාලනය අප විසින් බැහැර කළ යුතු නොවේ.

## ඉවර නොවන ශීත යුද්ධයක්

හන්ටිංග්ටන්ගේ තිසීසය අයත් වන්නේ ශීත යුද්ධය අවසානයත් සමඟ ගොඩනැගෙන නව ලෝක දේශපාලනය තුළ ගැටුම්වල ස්වභාවය කවරාකාර වේද යන ගැටළුවට විවිධ අයවළුන් විසින් ලබාදුන් පිළිතුරු අතරටය. මේ වූ කලී ඉවර නොවන ශීත යුද්ධයක් විශ්වාස කළ ලෝකයක් එය අවසන තවත් එවැනි ඉවර නොවන ගැටුමක් පිළිබඳව සංකල්පගත කිරීමට දරන ලද උත්සාහයකි. එඩ්වඩ් සයිද් දකින ආකාරයට මේ වූ කලී දෘෂ්ඨිවාදී යුද්ධය අවසානයේ බටහිර විසින් ශීත යුද්ධය පුරා නඩත්තු කළ බටහිර

උත්තරීතරබව නැවත වෙනස් ආකාරයකින් ස්ථාපිත කරනු පිණිස වෙනත් මානයක ගැටුමක් සංකල්පගත කිරීමකි (සයිද් 1990). එතුළින් නැවත බටහිර උත්තරීතර බව සාධනය කිරීමට අවකාශයක් ලැබෙන අතර බටහිර දේශපාලනික ක්‍රියාන්විතයන් සාධාරණීකරණය කිරීමේ හැකියාවක් නැවත වරක් හිමිවේ. එය තවදුරටත් තහවුරු වන්නේ හන්ටිංග්ටන්ගේ තිසීසය අවසානයේ ඔහු විසින් බටහිර උත්තරීතර බව රැකගනු පිණිස බටහිර විසින් අනුගමනය කළ යුතු දේශපාලනික උපායමාර්ග පිළිබඳ උපදෙස් දෙන බැවිනි.

> "සෑම ශිෂ්ඨාචාරයක්ම ආරම්භය, වර්ධනය හා පිරිහීම යන සමාන ක්‍රියාවලියක් හරහා ගමන් කරයි. බටහිර බලය පිරිහී යන තත්ත්වයක් තුළ බටහිර ශිෂ්ඨාචාරය සුරක්ෂිත කිරීම පිණිස ඇමරිකා එක්සත් ජනපදය හා යුරෝපා රටවල් බලවත් දේශපාලනික, ආර්ථික හා මිලිටරිමය ඒකාබද්ධතාවයක් අත්කරගත යුතු අතර ඔවුන් අතර වන වෙනස්කම් අනෙකුත් ශිෂ්ඨාචාරයන්ට අයත් රටවල් විසින් තම වාසියට යොදා ගැනිම වලකනු පිණිස තම රටවල ප්‍රතිපත්තීන් අතර මනා සම්බන්ධීකරණයක් පවත්වා ගත යුතුය" (හන්ටිංග්ටන් 1993:22).

එඩ්වඩ් සයිද්ට අනුව මේ යෝජනා කරන්නේ වෙනත් ආකාරයකින් ශීත යුද්ධය නැවත පවත්වාගෙන යාමටය (සයිද් 1990). එතුළින් ශීත යුද්ධ සමයේ මෙන්ම බටහිර විසින් සිදුකෙරන සියළු මැදිහත්වීම්, බලපෑම් කිරීම් හා යහපතෙහි ගැලවුම්කරුවා ලෙස බටහිර පෙනී සිටීම යුක්ති සහගත කෙරෙනු ඇත.

හන්ටිංග්ටන් සංකල්පගත කරන බටහිර සහ සැබෑ ලෙසම පවතින බටහිර අතර විශාල පරතරයක් ඇත. ඔහු බටහිර ශිෂ්ටාචාරයට අයත් ලෙස සලකන භූ දේශපාලනික අස්තිථ්‍යයන් (*entities*) තුළ සැළකිය යුතු ඉස්ලාම් සංස්කෘතියක් අන්තර්ගත වේ. උදාහරණයක් ලෙස ඔහු විසින් බටහිර හා මධ්‍යම යුරෝපය බටහිර ශිෂ්ටාචාරයට අයත් කලාපයක් ලෙස වර්ගීකරණය කරන විට ජර්මනියේ විශාල තුර්කි හා පාකිස්ථානු ජනගහනය, ප්‍රංශයේ විශාල උතුරු අප්‍රිකානු ජනගහනය, ස්වීඩනයේ හෝ ස්විට්සර්ලන්තයේ මුස්ලිම් ජනගහනයන් නොතකා හරියි. අනෙක් අතට බටහිර ප්‍රබුද්ධ, නූතන, ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරයේ කේන්ද්‍රයේ පිහිටි රටවල් සිදුකර ඇති එකී ශිෂ්ටත්වයට කිසිසේත් නොගැළපෙන ක්‍රියාවන් ඔහු නොතකා හරියි. මේ පිළිබඳව සාකච්ඡා කරන තලාල් අසාද් කියා සිටින්නේ යුරෝපා සංගමයට තුර්කිය ඇතුලත්

කරගැනීම පිළිබඳ සංවාදයේදී ඉදිරිපත් කෙරුනු තර්කයම යුරෝපීය රටවල් සම්බන්ධයෙන් අදාළ නොකරන ලද බවයි. එනම්, සිය මූලයන් ආසියානු වන තුර්කීන් යුරෝපයට ඇතුලත් කරගැනීමෙන් යුරෝපියානුභාවය දියකර හරිනු ඇතැයි කියන විට දෙවන ලෝක යුද්ධයේ මහා වර්ග සංහාරය සිදු කළ නාසීන්ගේ රට වූ ජර්මනිය යුරෝපය තුළ සිටීම එහි යුරෝපියානුභාවයට ගැටළුවක් ලෙස නොසැලකෙයි (අසාද් 2003:161-2). අනෙක් අතට නාසීන් විසින් යුරෝපය තුළ මහා යුදෙව් සංහාරය කරන විට එය ආර්ය හා යුදෙව් ශිෂ්ටාචාර අතර ගැටුමක් ලෙස කවරකු විසින් හෝ සූත්‍රගත කරනු නොලැබිණ. එය තේරුම්ගනු ලැබූයේ බටහිර ශිෂ්ටාචාරය ඇතුළත ගැටළුවක්, නූතනත්ව ගැටළුවක්, ප්‍රබුද්ධත්ව ගැටළුවක් ලෙසිනි. සිය අප්‍රිකානු හා මැද පෙරදිග යටත් විජිතයන්හි බටහිර රටවල් විසින් සිදු කළ මහා ජන සංහාරයන් ඔවුන්ව බටහිර ශිෂ්ටත්වයට ඇතුලත් කරගැනීමට ගැටළුවක් නොවෙද්දී තුර්කිය ආමේනියාවේ සිදුකළ සංහාරයන් ඔවුන් යුරෝපයට එක්කර ගැනීමේදී ඔවුන්ගේ යුරෝපීයභාවය ප්‍රශ්ණ කිරීමට හේතුවක් ලෙස ඉදිරිපත් කෙරුණි. මේ අනුව පෙනී යන්නේ මෙම බටහිර, මුස්ලිම් හෝ වෙනත් ශිෂ්ටාචාරයන් ලෙස වන ඉදිරිපත් කිරීම් පැහැදිලි දේශපාලනික වර්ගීකරණයන් වන බවයි.

# වර්ගීකරණය අහිංසක ක්‍රියාවලියක් නොවේ

අප හොඳින්ම දන්නා පරිදි හන්ටිංග්ටන් විසින් ශිෂ්ටාචාර ලෙස ඒකාකෘතිගතකොට වර්ගීකරණයකොට ඇති කලාපයන්හි කෙතරම් විවිධත්වයන්, සංකීර්ණතාවයන් හා විභේදනයන් පවතීද? බර්ලිනයේ, ඩර්බන්හි හෝ ඔස්ලෝවේ අතිමහත් ජන සහභාගීත්වයකින් යුතුව පවත්වනු ලබන හින්දු හෝ ඉස්ලාම් ආගමික උත්සව හා පෙරහැර ගැන කීමට ඇත්තේ කුමක්ද? බටහිර ශිෂ්ටාචාරයට අයත් යැයි කියන මධ්‍යයම යුරෝපීය රටවල් (හංගේරියාව, චෙක් සමූහාණ්ඩුව, පෝලන්තය හා ක්‍රොඒෂියාව) ඒ රටවල යුරෝපියානුභාවය ප්‍රශ්න කරමින් පරිවාරයට ඇද දමා ඇත්තේ සංස්කෘතික කාරණයක් නිසාවෙන්ද? මුළුමනින්ම ඉස්ලාමයේ වඩාත් ආධ්‍යාත්මික රූපාකාරයක් වන සූෆි ඉස්ලාමය අද බටහිර විසින් ඒකාකෘතිගතකොට ඇති ඉස්ලාමයට වඩා බෞද්ධ දර්ශනයට සමීප යැයි කෙනෙකුට තර්ක කළ නොහැකිද?

අප පිළිබඳවම හන්ටිංග්ටන්ගේ වර්ගීකරණයෙන් උදාහරණයක් ගතහොත් එය කෙතරම් යථාර්ථවාදී නොවන්නක් දැයි මොනවට පිළිබිඹු වේ. ඔහු ශ්‍රී ලංකාව තබන්නේ බෞද්ධ ශිෂ්ටාචාරය නමැති වර්ගීකරණය

තුළය. ඔහු ඊට ඇතුළත් කරන සෙසු රටවල් වන්නේ භූතානය, කාම්බෝජය, මියන්මාරය, මොංගෝලියාව සහ තායිලන්තය යි. ශ්‍රී ලංකාව එක් අතකින් ඉන්දියාවට වඩාත් සමීප වන අතර තවත් අතකින් බටහිරට වඩාත් සමීප වෙයි. එය මොංගෝලියාව හෝ භූතානය සමඟ බෙදාහදා ගන්නා සංස්කෘතිකමය පොදු බවක් ඇත්නම් එය අතිශයින්ම සුළුතර කාරණාවන් කිහිපයක් සම්බන්ධයෙන් පමණක්ම විය යුතුය.

මේ අනුව ඉස්ලාමය වෙනම ශිෂ්ටාචාරයක් ලෙස ඒකාකෘතිගත කොට එය බටහිර සමඟ ශිෂ්ටාචාර ගැටුමක නිරත වන බවට ගොඩනඟන තිසීසය කෙතරම් දුර්වල එකක් ද යන්න පැහැදිළිය. එය බටහිර ශාස්ත්‍රාලීය සංවාදයන් තුළ දී අනවරත විවේචනයන්ට ලක්ව ඇත. එමෙන්ම කිසිදු පිළිගත් බටහිර ජනමාධ්‍යයක් ඍජුවම වර්තමාන ISIS හෝ වෙනත් ඉස්ලාමීය අන්තවාදයක් ශිෂ්ටාචාර අතර ගැටුමක් ලෙස විවෘතව ප්‍රකාශයට පත්කරන්නේ නැත. නමුත් හන්ටිංග්ටන් යනු ඇමරිකානු එක්සත් ජනපද රාජ්‍ය දෙපාර්තමේන්තු උපදේශකවරයෙකි. ඔහු වියට්නාම් යුද්ධයේදී ද, ශීත යුධ කාලය හා පශ්චාත් ශීත යුධ සමය තුළ ද රාජ්‍ය දෙපාර්තමේන්තුවට උපායමාර්ගික උපදේශනයන් සපයා ඇත. ඔහුගේ

ශිෂ්ටාචාර අතර ගැටුම පිළිබඳ සංකල්පගත කිරීම මුල්වරට පළ වන්නේද ඇමරිකානු විදේශ ප්‍රතිපත්තිය හා ජාත්‍යන්තර සබඳතා පිළිබඳ සඟරාවක් වන *Foreign Affairs* හි ය. මේ අනුව හන්ටිංග්ටන්ගේ අදහස් ප්‍රායෝගික තලයේ තෙකරම් බලපෑම් සහගත වන්නේද යන්න සිතාගත හැක. හන්ටිංග්ටන්ගේ ශිෂ්ටාචාර අතර ගැටුම පිළිබඳ සංකල්පය ඇකඩමියාව තුළ අද වන විට දුර්වල වී ඇති නමුත් බල දේශපාලනය තුළ එය තවදුරටත් ශක්තිමත් සංකල්පයකි. මැදහත් යයි සැලකෙන බටහිර ජනමාධ්‍ය පවා සිය භාවිතාව තුළ අප්‍රකාශිතව මෙම ආකල්පයන් නිරූපණය කරයි. අනෙක් අතට මෙය ශිෂ්ටාචාර ගැටුමක් ලෙස නිරූපණය කිරීමට ඉස්ලාම් අන්තවාදීහු ද උත්සුක වෙති. ඒ ඉස්ලාම් ශිෂ්ටාචාරය යන ඒකාකෘතිගත කිරීම තුළ අතිමහත් විවිධත්වයක් හා අභ්‍යන්තර ප්‍රතිවිරෝධතාවන්ගෙන් ගහණ ඉස්ලාම් ලෝකයේ එකම නියෝජිතයන් ලෙස තමන්ව නිරූපණය කිරීමට එයින් ඔවුන්ට අවකාශය සැළසෙන බැවිනි. ශ්‍රී ලංකාවේද බටහිර විරෝධී දේශපාලන අදහස් දරන බොහෝ දෙනා මේ බටහිර උපායමාර්ගික සංකල්පගත කිරීම පිළිගෙන ඇත. උත්ප්‍රාසජනක ලෙස ඔවුන් ද මුස්ලිම්වරුන් දෙස බලන්නේ ඔවුන් නූතන විරෝධී, ප්‍රබුද්ධත්ව විරෝධී, අනාගමික විරෝධී (බෙලි කපන, ළමයින් දූෂණය කරන,

අධ්‍යාපනය හා කලාව පිටුදකින) ශිෂ්ටාචාරයකට අයත් වූවන් පිරිසක්ය යන ඒකාකෘතිගත කිරීම තුළිනි. අප්‍රේල් 21 වන දා එල්ල වූ මරාගෙන මැරෙන බෝම්බ ප්‍රහාර වලට පසු ජනප්‍රිය තලයේ බෙහෙවින් සංවාදයට ලක්වූයේ ද මෙම කාරණාවන්ය. ඊට පෙර 2014 ජුනි දී අලුත්ගමදී[2] සහ 2018 මාර්තු දිගන දී[3] මුස්ලිම්වරුන්ට එරෙහිව එල්ල වූ ම්ලේච්ඡ ප්‍රහාරයන්ට අත්‍යාසන්න කාල වකවානුවලදී ද මේ සාකච්ඡාවම තීව්‍ර ලෙස කරළියට පැමිණි බවද මෙහිදී සිහිපත් කිරීම වටී. දැන් අන්තවාදී, ම්ලේච්ඡ සුළුතරය සමස්ත ඉස්ලාමීය ශිෂ්ටාචාරයක ගති ලක්ෂණයක් ලෙස ඒකාකෘතිගත කළ බටහිර ආඛ්‍යානය, එය වර නඟන බටහිර විරෝධී යැයි කියාගන්නා තැනැත්තන් ද පිළිගෙන ඇත. අනෙක් අතට අතිශය විවිධත්වයන්ගෙන් ගහණ සමස්ත ඉස්ලාමීය ශිෂ්ටාචාරය තමන්ගේ මූලධර්මවාදය බවට ඒකාකෘතිගත කිරීම විසින් ඉටුවන්නේ අන්තවාදී සුළුතරයේ අපේක්ෂාවයි.

---

2. 2014 ජුනි මාසයේදී කළුතර දිස්ත්‍රික්කයේ අලුත්ගම ප්‍රදේශයේ මුස්ලිම් විරෝධී කැරලිකාරීත්වයක් හටගත් අතර ඒ සම්බන්ධයෙන් බෞද්ධ අන්තවාදී සංවිධානයක් වන බොදු බල සේනා සංවිධානය වෙත චෝදනා එල්ල විය.

3. 2018 මාර්තු මාසයේදී බෞද්ධ අන්තවාදී පිරිසක් විසින් මහනුවර දිස්ත්‍රික්කයේ දිගන ප්‍රදේශයේ මුස්ලිම් ප්‍රජාව ඉලක්ක කරගනිමින් ප්‍රහාර ගණනාවක් දියත් කෙරින.

# ශිෂ්ටාචාර අතර ගැටුම වෙනුවට ශිෂ්ටාචාරය ඇතුළත ගැටුමක්

තාරික් රාමදාන් පවසන ආකාරයට ඉස්ලාමය යනු පර්යාවලෝකයන් රැසකින් යුතු අස්තිථ්‍යයකි (*entity*). උදාහරණයක් ලෙස අද වඩාත් ආන්දෝලනාත්මකව ඇති 'ෂරියා', 'ජිහාඩ්' වැනි සංක්ලපයන් සම්බන්ධයෙන් අර්ථකථනයන් රැසක් පවතී. ශරියා යන වචනය ඇසුනු සැනින් අප වටහා ගන්නේ එය ඉස්ලාම් නීතිය ලෙසය. නමුත් රාමදාන් පවසන ආකාරයට ෂරියා යන සංකල්පයේ හදවත වන්නේ සූෆි ඉස්ලාමික අධ්‍යාත්මික සම්ප්‍රදායයි. එතුළ එය අර්ථ දක්වනු ලබන්නේ සමාදානය කරා යන මාර්ගය ලෙසිනි. ජිහාඩ් යනු පුද්ලිකව තමා තුළත්, පවුල තුළත්, ප්‍රජාව තුළත් මේ සමාදානය ඇති කිරීමට ඇති බාධාව සමඟ සටන් කිරීමයි. එය ශුද්ධ වූ යුද්ධයක් පිළිබඳ වූවක් නොවේ. තමා තුළත්, තමා අවටත් සමාදානය ඇති කිරීම සඳහා සිදුකරනු ලබන අධ්‍යාත්මික අරගලයකි. එහි ඇත්තේ සමාදානය වෙනුවෙන් ඊට ඇති බාධාවන්ට ප්‍රතිරෝධය දැක්වීමයි. ජිහාඩය වූ කලි මූලිකවම මිනිසා තමාවම වෙනස් කරගැනීම සඳහා වූ අභ්‍යන්තරික අරගලයකි. නමුත් අද අප දන්නේ ෂරියා හා ජිහාඩය

පිළිබඳ අන්තවාදීන් ඉදිරිපත් කරන අර්ථ නිරූපණය පමණි. ඒකාකෘතිගත කිරීමේ ඇති අන්තරාය එයයි.

අන්තවාදීන්ගේ අදහස් හා ක්‍රියාවන් අද වන විට අප ඉස්ලාම් ශිෂ්ටාචාරයටම පොදු වූවක් ලෙස පිළිගෙන ඇත්තෙමු. එය විසින් අප දන්නා බොහොමයක් දේ අපගේ තර්ක බුද්ධියට හසු නොවන ලෙස ආවරණය කොට ඇත. ඉස්ලාම් ඇෆ්ගනිස්ථානය 70 දශකයේ මැද භාගයේදී ශීත යුද්ධයේ බල පොරයට ගොදුරු වන තෙක් ආසියාවේ වඩාත් අනාගමික හා නූතන රාජ්‍යයක්ව පැවැති බවත්, කාබුල් විශ්ව විද්‍යාලයේ වෛද්‍ය පීඨයේ ශිෂ්‍යයන්ගෙන් වැඩි ප්‍රතිශතයක් ඇෆ්ගන් තරුණියන් වූ බවත් අපගේ නොදැනුමක් බවට එය විසින් පත් කොට ඇත. පාකිස්ථානයේ හෝ ඉරානයේ ඉස්ලාම් අන්තවාදී දේශපාලන සංවිධානයන්ට සියයට දහයකට වඩා ඡන්ද ප්‍රමාණයක් ලබාගැනීමට කිසි දිනෙක හැකිවී නැත. ඊජිප්තුවේත්, ටියුනීසියාවේත්, සිරියාවේත්, තුර්කියේත් ආදී වශයෙන් බහුතරයක් ඉස්ලාමීය රටවල අනාගමික පාලනයක් වෙනුවෙන් පෙනී සිටින පිරිස අතිබහුතරයකි. ඊජිප්තුවේ මුබාරක් පාලනය පෙරලා දැමීමට වීදි බට පිරිස් එරට ප්‍රජාතාන්ත්‍රික ජනතාව මිස අන්තවාදීන් නොවේ. කොටින්ම එය සංවිධානය කළේ

පවා මුස්ලිම් සහෝදරත්වයේ නායකයින් විසින් නොවේ. මේ සියල්ල අපට මඟ හැරීම අහඹුවක්ද?

අබිල් බිල්ග්‍රාමි පවසන ආකාරයට ඕනෑම සාමාන්‍ය බුද්ධියක් ඇති අයෙකුට පෙනී යා යුතු කාරණයක් වන්නේ මුස්ලිම්වරුන්ගේ බහුතරය අන්තවාදීන් නොවන බවයි. ඔවුහු අතිශයින් සිය ආගමට භක්තිවන්තව සිටින විටදී පවා සිය ආගමික දේශනාවන් සියල්ලටම අදාළ කරන පරමවාදයක එල්බ නොගනිති. සිය ආගමේ නාමයෙන් ප්‍රචණ්ඩ ක්‍රියාවන්හි යෙදීමේ එළැඹුමක් ඔවුන් වෙතින් පළ නොවේ. සෞදි අරාබියේ හෝ ඉරානයේ ප්‍රජා පීඩක පාලක තන්ත්‍රයන් විසින් තමන් මත පනවන දෘඩ ඉස්ලාමීය දාෂ්ඨිවාදය කෙරෙහි එරට ජනයා ආශක්තව සිටින්නේ යැයි කීමට සාක්ෂියක් නැත.

> "ඉස්ලාමීය සමාජයන් හි මධ්‍යස්ථ හා මූලධර්මවාදී මුස්ලිම්වරුන් අතර අප්‍රකාශිත ගැටුමක් පවතී. මධ්‍යස්ථ මුසල්මානුවා මුහුණ දෙන සුවිශේෂී අභ්‍යන්තරික, ආචාරධාර්මික හා අධ්‍යාත්මික ගැටුම් සම්බන්ධයෙන් මානුෂික අවධානයක් යොමු කිරීම, අනාගමිකවාදීන් හා මූලධර්මවාදීන් අතර වන ගැටුම නිරාකරණය කිරීමේ මූලික කොන්දේසියකි" (බිල්ග්‍රාමි 2003:92).

බිල්ග්‍රාමි පවසන ආකාරයට බහුතරයක් වන සාමාන්‍ය මුස්ලිම්වරුන්ගේ හඬ යටපත්කොට ඉස්ලාම් අන්තවාදීන්ට හැමවිටම ප්‍රසිද්ධිය ලබාදෙනු ලැබ ඇත. ඔහු පවසන ආකාරයට වර්තමානයේ අනාගමිකවාදය යනු ආගමික භක්තිය ඇති හෝ නැති සියලු පුරවැසියන්ට ආගමික මූලධර්මයන් හා පරිචයන් මත පදනම් නොවූ පාලනයක් තුළ සාමකාමී ලෙස ජීවත්වීම සඳහා වන එකඟත්වයක් පිළිබඳව වන දේශපාලන මූලධර්මයකි. අතිබහුතරයක් මුස්ලිම්වරු එවන් පාලනයකට කැමැත්ත පළ කරති.

නමුත් බටහිර විසින් සියළු ඉස්ලාම් රටවල් ඉස්ලාම් ශිෂ්ටාචාරයක් ලෙස ඒකාකෘතිගතකොට ඒවායේ සියළු ජනතාව නූතන විරෝධී, ප්‍රබුද්ධත්ව විරෝධී, අනාගමික විරෝධී ආගමික අන්තවාදීන් ලෙස සිතීමට අපව පොළඹවා ඇත. එඩ්වඩ් සයිද් පෙන්වා දෙන ආකාරයට එතුළින් තමන්ට පක්ෂපාත සමහර ඉස්ලාම් රටවල දූෂිත පාලකයින් හා ඔවුන්ගේ දුර්දාන්ත රෙජීමයන් ආරක්ෂා කිරීමට බටහිර රටවල් බලපත්‍රයක් ලබාගෙන ඇත (සයිද් 1996). ඒ ඔවුන් කියන පරිදි බටහිර ශිෂ්ටාචාරයේ අංගයන් ලෙස ඔවුන් නම් කරන නූතනත්වයේ, ප්‍රබුද්ධත්වයේ, අනාගමිකත්වයේ ආරක්ෂකයින් ලෙස මෙම පාලකයින්

පෙනී සිටින බැවිනි. මේ ආකාරයට ශීත යුධ බටහිර බල ව්‍යාපෘතිය නැවත වෙනත් ආකාරයකින් ගෙන යාමට ඇමරිකා එක්සත් ජනපදය ප්‍රමුඛ බටහිර පාලකයින්ට හැකියාවක් ලැබී ඇත. ශීත යුද්ධය තුළ කොමියුනිස්ට් විරෝධීන් ලෙස පෙනී සිටි තමන්ට පක්ෂපාත දූෂිත ලතින් ඇමරිකානු හා ආසියානු රටවල පාලකයින් ආරක්ෂා කළ තර්කයම යොදා ගනිමින් නූතනවාදී පාලකයින් ලෙස පෙනී සිටින ඉස්ලාම් රටවල තමන්ට පක්ෂපාත දූෂිත පාලනයක් ආරක්ෂා කිරීමට කටයුතු කරමින් පවතී.

සැබෑ ගැටුම ඇත්තේ ඉස්ලාමීය අන්තවාදීන් අතර සහ මේ මධ්‍යස්ථ, නූතන, ප්‍රබුද්ධ මුස්ලිම් බහුතරය අතරය. මෙය ශිෂ්ටාචාර අතර ගැටුමක් නොවේ; එය ශිෂ්ටාචාරය ඇතුළත ගැටුමකි. ශිෂ්ටාචාර අතර ගැටුම යන ව්‍යාජ ආවරණය නොවන්නට එකී නිහඬ බහුතරයට මීට වඩා සහෝදරාත්මක සහයෝගයක් ලෝකයේ සෙසු කලාපයන්හි නූතනවාදී අනාගමික බලවේගයන් වෙතින් ලැබෙන්නට තිබිණ. නමුත් අනාගමික විරෝධී, නූතන විරෝධී කලාපයක්/ශිෂ්ටාචාරයක් ලෙස ඉස්ලාම් රටවල් වර්ගීකරණය කරනු ලැබ තිබීම විසින් එය වළකනු ලැබ ඇත.

අප රට තුළද බටහිර විරෝධී යැයි කියාගන්නා බහුතරයක් පිරිස විසින් වපුරමින් සිටින්නේ මේ අත්‍යන්ත බටහිර මතවාදයමය. එබැවින් අන්තවාදී නොවන මුස්ලිම් මිනිසාගේ ගැටළුව නොඇසී ගොස් තිබේ. අප අද ඉස්ලාමය ලෙස දකින්නේ මරාගෙන මැරෙන බෝම්බ පිපිරවූයේ යැයි කියන ජාතික තවුහීද් ජමාද් වැනි අන්තවාදීන් දෙසන දහමයි. ඇත්ත වශයෙන්ම ගැටුම ඇත්තේ ඉස්ලාමය හා වෙනත් කවර හෝ ශිෂ්ටත්වයක් අතර නොවේ. ගැටුම ඇත්තේ මූලධර්මවාදය සහ අනාගමිකත්වය අතරය. මේ ගැටුමේදී ඉස්ලාම් මෙන්ම බෞද්ධ හෝ අන් කවර හෝ ආගමික අන්තවාදියකු වැටෙන්නේ එකම කඳවුරකටය. එබැවින් අපගේ වර්තමාන යථාර්ථය වඩාත් ගැඹුරින් අප විසින් වටහා ගත යුතුව ඇත. මේ තත්ත්වය තුළ මුස්ලිමුන්ට විරුද්ධව "මොනව හරි කිරීමට" (මෙහිදී අප අදහස් කරන්නේ මුස්ලිම් අන්තවාදී සංවිධාන මර්දනය කිරීමට රාජ්‍යය ගනු ලබන පියවර නොව, අපගේ අසල්වැසි මුස්ලිම් ප්‍රජාවන් වෙත ප්‍රචණ්ඩත්වය මුදාහැරීමට කරන යෝජනාවන්ය) අපට කතා කරන කවරකු වුව නොදැනුවත්ව හෝ සිටින්නේ ඉස්ලාම් මූලධර්මවාදියාගේ කඳවුරේමය.

# සමාලෝචනය

මේ අසීරු මොහොතේ අපගේ වගකීම විය යුත්තේ අන්තවාදී නොවන බහුතර මුස්ලිම් මිනිසා වඩාත් ළං කොට ගැනීමයි. අප සමඟ සියවස් ගණනක් පුරා පොදු බවක් බොදාහදාගෙන ජීවත්වූයේ මේ බහුතර මුස්ලිම් ප්‍රජාවයි. අපට වෙනස් ශිෂ්ටාචාරයකින් පැමිණියේ යැයි පවසා ඔහු අපට වෙනස් බවට පත්කරන ලද්දේ කිසියම් නිශ්චිත දැනුම් පද්ධතියක් විසිනි. දැනුම නිෂ්පාදනය යනු අවිහිංසක ක්‍රියාදාමයක් නොවේ. ශිෂ්ටාචාර අතර ගැටුම පිළිබඳව වන අද අපගේ දැනුම බටහිර නිර්මිතයක් වනවා පමණක් නොව එය නිශ්චිත බටහිර භූ දේශපාලනික වුවමනාවක් වෙනුවෙන් නිෂ්පාදනය කරන ලද්දකි. ''මරාගෙන මැරෙන ත්‍රස්තවාදියා'' අවශ්‍ය වූයේ මේ බෙදුම් රේඛාව සළකුණු කිරීමටය. අප ශිෂ්ඨ යැයි පිළිගන්නා සියලු මතිමතාන්තරයන් අභියෝග කළ බෙලි කපන, දරුවන් මරන, ගැහැණුන් ලිංගික වහලියන් කරන, මිනිස් ශිෂ්ටාචාරයේ අග්‍රගණ්‍ය නිර්මාණ විනාශ කර දමන තැනැත්තා එකී ත්‍රස්තවාදියා මිස අප සමඟ කාලාන්තරයක් කිසිදු ගැටලුවකින් තොරව ජීවත්වූ මුසල්මානුවා නොවේ. හොඳින් කල්පනා කර බැලුවහොත් අප දන්නා මුසල්මානුවෝ අති බහුතරයක් තම පවුලට, දරුවන්ට ආදරය දක්වන, ඔවුන් වෙනුවන්

වඩා යහපත් හෙටක් නිර්මාණය කිරීමට වෙහෙස වන අප වැනිම වූ මනුෂ්‍යයින්ය. ඉස්ලාමීය ශිෂ්ටාචාරයේ සුළුතර අන්තවාදී කණ්ඩායමක් නිර්මාණය කර එය සමස්තය යැයි ඒකාකෘතිගත කළේ ඉහත කී නිශ්චිත දැනුම විසිනි. නමුත් අද සියවස් ගණනක් පුරා අප හා ජීවත්වූ මුස්ලිම් මනුෂ්‍යයා තේරුම් ගැනීමට අප නොදැනුවත්වම යොදා ගනිමින් සිටින්නේ, අදට පෙර දින නිමවූ මේ බටහිර ආඛ්‍යානයයි. ඇත්තෙන්ම මූලධර්මවාදියාගේ අපේක්ෂාව ද එයයි. ඉස්ලාමීය ශිෂ්ටාචාරය තුළ මේ නව අන්තවාදයට ගොදුරු නොවී සහජීවන පැවත්මක නිරතවීමේ අසීරු අරගලයක නිරත බහුතර මුස්ලිම් මිනිසාව අප බැහැර කළ හොත්, අනිවාර්ය ලෙසම එය අන්තවාදියාගේ ජයග්‍රහණයක් වනු ඇත. කොටින්ම, එය බටහිර භූ දේශපාලනික බල ව්‍යාපෘතියේ ජයග්‍රහණයයි.

එබැවින් මේ මොහොතේ තැනින් තැන ඇසෙන මුස්ලිම් මිනිසාගේ ඇඳුම පැළඳුම, දේහ විලාසිතාවන්, ජීවන විලාසයන්, අභිචාර විධීන් පිළිබඳව වන වෛරී අදහස්වලට හෝ මේ අශිෂ්ඨ ජාතියෙන් පළිගත යුතු බවට/පාඩමක් ඉගැන්විය යුතු බවට වන ඇඟවුම් සහිත ප්‍රකාශ කරන කිසිවකුට 21 දින අප අත්දුටු භයංකර යථාර්ථයෙන් ඔබ්බට අපව ගෙන යා නොහැකිය. ඔවුන් විසින් නැවත නැවත

අපට මුණ ගස්වනු ඇත්තේ එවැනිම සිදුවීම් පමණකි. අද අප හුමවේ ඇති අභියෝගය වන්නේ අපට තේරුම් ගත නොහැකි, අපේ සදාචාර වටිනාකම්වලට නොගැළපෙන ශිෂ්ටාචාරයකට අපේ අසල්වැසි මුස්ලිම් මිනිසා අයත් යැයි අපට උගන්වන ලද බටහිර ආඛ්‍යානය, අත්හරින්නේ (*unlearn*) කෙසේද යන්නයි. ඉස්ලාම් ශිෂ්ටාචාරයේ සුළුතරයක් වූ ම්ලේච්ඡ අන්තවාදයට පිළිතුරු සැපයිය හැක්කේ සියවස් ගණනක් අප හා ජීවත් වූ මිනිසා පිළිබඳව බටහිර විසින් ලබාදුන් රාමුවෙන් ඔවුන් දෙස බැලීමෙන් නොවේ. ශිෂ්ටාචාර අතර ගැටුම පිළිබඳ ආඛ්‍යානය බැහැර කළ පසු අපට හමුවෙන්නේ එකම සමාජ යථාර්ථයක් අප හා බෙදා හදාගෙන ජීවත් වන, අප වැනිම තම සමාජයේ සුළුතර අන්තගාමීත්වයන්ගෙන් පීඩා විඳින්නාවූ, ඒ සමඟ අරගල කරන, හවුහරණක් නොමැති තැන ඒ අභියස නිහඬ වන හෝ එහි බලයට අවනත වන, නිහඬ සාමකාමී බහුතර මිනිස් ප්‍රජාවකි. අප්‍රේල් 21 දින අප අත්දුටු ම්ලේච්ඡත්වයට එරෙහි අරගලය ඔවුන් හා අප එක්ව කරන සාමූහික අරගලයක් විය යුතුව ඇත. එය එසේ නොවන තාක් කල්, විවිධ වූ ආගම්වල නාමයෙන් මරාගෙන මැරෙන ම්ලේච්ඡයන් අප ඉදිරියේ ප්‍රාදූර්භූත වන ක්‍රීඩාවේ පාත්‍රකරුවන් වීම හැර අන් ඉරණමක් අපට ඉතිරි නොවනු ඇත. ■

# இஸ்லாமியத் தீவிரவாதம் :

## நாகரிகங்களுக்கிடையிலான மோதலா?
## நாகரிகத்துக்குள்ளான மோதலா?

விதுர பிரபாத் முணசிங்க
கௌஷல்யா ஆரியரத்ன

புதிய சமூக கற்பனைகள் திட்டத்தின் (“New Social Imaginaries“) கீழ் இக்கட்டுரையை வெளியிட தேர்ந்தெடுத்தமைக்காக லண்டன் பல்கலைக்கழக கோல்ட்ஸ்மித் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி கிரண் கிரெவால் அவர்களுக்கும் இவ்வெளியீட்டின் மீது கருத்துக்களை வழங்கிய சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிதியத்தின் நிறைவேற்று இயக்குனர் கலாநிதி சகுந்தலா கதிர்காமர் அவர்களுக்கும் அந்நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் செயற்பாட்டு இயக்குனர் சந்துன் துடுகல அவர்களுக்கும் நன்றிகளை தெரிவிக்கின்றோம். மேலும் இவ்வெளியீட்டின் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிப் பெயர்ப்புகளை வாசித்து திருத்தங்களை மேற்கொண்ட ஒலிவர் பிரைட்மென், M.C. ரஸ்மின் மற்றும் மாடசாமி விஜயகாந்த் ஆகியோருக்கும் எமது நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

## முன்னுரை

நாம் இன்னும் 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இந்நாட்டில் இடம்பெற்ற மிலேச்சத்தனமான தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் அதிர்ச்சியில் இருக்கின்றோம்.[1] மனிதர்கள் என்ற வகையில் அழிவுகளின்போது உணர்ச்சிவசப்படுவது இயல்பானதொரு விடயமாக இருக்கின்ற போதிலும், அந்த உணர்வுகளின் அடிப்படையில் எடுக்கப்படுகின்ற உடனடி எதிர்ச் செயற்பாடுகள் எமக்குப் பெற்றுக் கொடுத்திருப்பது நன்மையான பெறுபேறுகள் அல்ல என்பதற்கு எமது அண்மைக்கால வரலாறு சான்று பகிர்கின்றது. சிவில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னரான பத்தாண்டுகள், 1983 இல் என்ன நடந்தது என்பதை நாம் மறந்து விடுமளவுக்குப் போதுமானதல்ல. உணர்ச்சிவசப்பட்டுத் தேடும் பதில்களைவிட ஆழமாகச் சிந்திப்பதனைத் தொடர்ச்சியாகப் புறக்கணித்ததும் அவ்வாறு புறக்கணித்துக்கொண்டு இருக்கின்றதுமான

1. இக்கட்டுரை நாட்டின் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சுற்றுலாப் பிரயாண விடுதிகள் பலவற்றில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்ற 2019 ஏப்ரல் 21 ஆம் திகதியைத் தொடர்ந்து வந்த சில தினங்களில் எழுதப்பட்டுள்ளது. அத்தாக்குதல்களினால் சுமார் 253 பேர் உயிரிழந்துள்ளதுடன் 500 பேரளவில் காயமடைந்துள்ளனர்.

ஒரு சமூகத்துக்கு இச்சந்தர்ப்பத்தில் நாம் அதிகளவில் ஈர்க்கப்படாத அக்கடினமான செயற்பாட்டினையே முன்மொழிகின்றோம்.

## அறிமுகம்

ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்களுக்கான பொறுப்பை ISIS அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்கு முன்னர் ISIS என்று நாம் கண்டது, மத்திய கிழக்கு நாடுகளில் செயல்படுத்தப்பட்ட, பல்வேறு மேற்கு மற்றும் ஆபிரிக்க வலய நாடுகளில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்ட தீவிரவாத அமைப்பினையேயாகும். பிற்காலங்களில் ஈராக் மற்றும் சிரியா போன்ற சில மத்திய கிழக்கு நாடுகளில் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக நாம் கேள்விப்பட நேர்ந்த செய்திகள் எம்மை கதிகலங்கச் செய்தன. அவற்றின் சில வீடியோக்களில் காட்டப்பட்டுள்ள விடயங்கள், நாம் நாகரிகம் என்று நம்புகின்ற பல சித்தாந்தங்களைச் சவாலுக்கு உட்படுத்துகின்றன. ஒருசமயத்தில், அவர்களது பிடியில் சிக்கிய பாரியளவு ஆண்களை வரிசையாக நிற்கச்செய்து கழுத்தை வெட்டிக் கொலை செய்வதனை நாம் காண்கிறோம்.

மற்றுமொரு செய்தியில் அவர்களது பிடியிலிருந்து தப்பியோடிவந்த ஒரு பெண்பிள்ளை அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் பாலியல் அடிமைகளாக ஆக்கப்படுகின்ற விதத்தினை விபரிக்கிறது. இணையத்தளத்தினூடாக வலம் வருகின்ற மற்றுமொரு வீடியோவில் ஈராக்கின் மொசூல் நகரில் பண்டைய இடிபாடுகள் மற்றும் கலைப் படைப்புக்கள் என்பன அவர்களது பளுவான சம்மட்டித் தாக்குதலின் மூலம் இடிந்து விழுகின்றமையைக் காணலாம். இவையனைத்தும் நாங்கள் நாகரிகம் என்று கருதக்கூடிய நியமங்களுக்கு அப்பாற்பட்டதும் எம்மால் பொருண்மைக்குள் உள்ளடக்க முடியாததுமான செயற்பாடுகளாகும். 21 ஆம் திகதி முதன் முறையாக இலங்கையில் நாமும் அத்தகையதோர் அனுபவத்திற்கு முகங்கொடுத்தோம். எந்த வழியில் சிந்திக்கின்ற போதிலும் எதற்காகச் செய்யப்பட்டது என்று புரிந்துகொள்ள முடியாத ஒரு காரணத்துக்காக அப்பாவிப் பெண்கள், மனிதர்கள், குழந்தைகள் கொலை செய்யப்பட்டமை எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அன்று நாம் தொலைக்காட்சித் திரைகளில் கண்ட அத்தகைய

மிலேச்சத்தனம் இன்று எமது அன்றாட வாழ்க்கைக்குள் நுழைந்துவிட்டது. உண்மையில் எமது வாழ்வின் அடிப்படையாக விளங்குவதாக எம்மால் நம்பப்படுகின்ற தார்மீகக் கோட்பாடுகள் இத்தனை இழிவான முறையில் மீறப்படுகின்றதோர் உலகம் எம்மத்தியில் தோற்றம் பெற்றுக்கொண்டிருப்பது எவ்வாறு? இதனை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது?

இக்கேள்விக்கு சில தசாப்தங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட பிரபல்யம் வாய்ந்ததும் எளிமையானதுமான ஒரு பதில் உள்ளது. அது யாதெனில், நாம் வாழ்கின்ற நாகரிகத்தைவிட வேறுபட்டதொரு கோட்பாட்டின் மீது கட்டியெழுப்பப்பட்ட நாகரிகமடைந்த ஒரு குழுவினுடைய செயற்பாடுகள் என்பதாகும். உண்மையில் இது ஆறுதலளிக்கக்கூடியதொரு பதிலாகும். அவர்கள் நம்மைப் போன்றவர்களல்லர் என்பதைத் தெரிந்துகொள்வதே சிறந்ததோர் ஆறுதலாகும். இன்னொரு வகையில் அந்த இஸ்லாமிய நாகரிகத்துக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டில் எங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அதன் மூலம் வழி ஏற்படுகின்றது. இப்போது எமது முஸ்லிம் அயலவர்கள் அந்த வெளிநாட்டு நாகரிகத்தின்

பங்காளியாக மாறுகின்றனர். தற்போது அவர்களது ஆடை அணிகலன்கள், நடைப்பாங்குகள், வாழ்வியல் முறைமைகள், சடங்கு விதிகள் ஆகிய அனைத்தும் எம்முடையதல்லாத நாகரிகமாக, அதாவது அநாகரிகமாகக் கருதி நீக்கப்பட்டு வருகிறது. "அடுத்த ஜென்மத்தில் மிருகமாகப் பிறப்பினும் பரவாயில்லை முஸ்லிமாக மட்டும் பிறந்துவிட வேண்டாம்." என்று கூறப்பட்ட போஸ்ட் ஒன்று முகப்புத்தகத்தில் பிரபலமாக வலம் வந்துக் கொண்டிருந்தது. தற்போது முஸ்லிமல்லாத முகப்புத்தக சமுதாயத்தின் மத்தியில் பிரபல்யம் பெற்றுள்ளவாறு, முஸ்லிம்கள் தமது பிள்ளைகளுடன் தம்மை வெடிக்கச் செய்துகொள்வது மரணத்துக்குப் பின்னர் சுவர்கத்தில் எழுபத்திரெண்டு கன்னியர்களுடன் பாலியல் இன்பம் அனுபவிக்கும் நோக்கத்திலாகும். ஆயினும் இச்சந்தர்ப்பத்தில் எமக்கு மறந்துபோயுள்ள விடயம் யாதெனில், இந்த முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகளாக எமது சமூகத்தில் எம்முடன் வாழ்ந்தவர்கள் என்பதாகும். அக்காலத்தில் அவர்கள் தொடர்பில் இவ்வாறானதொரு சிக்கல் எங்களுக்குக் காணப்படவில்லை. திடீரென அவர்கள் எமது நாகரிகத்திலிருந்து தூரமாகியவர்களாக மாறியது எவ்வாறு? அவ்வாறெனின் நாம் பல

நூற்றாண்டுகளாக அவர்களுடன் ஒன்றிணைந்து வாழ்ந்தது எவ்வாறு? அவ்வாறின்றேல் இக்கதை புதிதாகத் தோன்றியதா? அவ்வாறாயின் அக்கதை யாருடைய தயாரிப்பு? அதன் பின்னணியில் காணப்படும் அரசியல் தேவைப்பாடுகள் மற்றும் வரலாற்று நிலைமைகள் என்ன? அத்தகைய கதைகளை வரவேற்பதினூடாக நாம் அடைந்து கொள்ளும் நன்மைகள்/தீமைகள் என்ன? அது யாரேனும் ஒருவரால் உருவாக்கப்பட்டதொரு கதையாக இருப்பின் 21 ஆம் திகதி உண்மையில் நிகழ்ந்தது என்ன? அவர்கள் உண்மையில் நாகரிகம் என்ற வகையில் நிலையான உலகில் யாரேனும் ஒருவரால் ஏற்றுக்கொள்ள முடியாத மிலேச்சத்தனமான செயற்பாட்டில் ஈடுபடவில்லையா?

மேற்குறிப்பிடப்பட்ட கேள்விகளை எழுப்புகின்ற கருத்தாடல் ஒன்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதே இந்த ஆக்கத்தின் நோக்கமாகும். இந்த அதிர்ச்சிகரமான சந்தர்ப்பத்தில் அவ்வாறானதொன்றைச் சிந்திப்பதும்கூட சங்கடமாக உள்ளது. இருப்பினும், எம்மூடாக அவ்வாறானதொரு கருத்தாடல் துவங்கப்பட வேண்டியிருப்பது எம் முன்னிலையில் வெளிக்கொண்டுவரப்படவிருக்கும்

புதிய யதார்த்தங்களைப் புரிந்துகொள்வதற்கு அக்கருத்தாடல் மிகமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதனாலாகும். எனவே, சிரமத்துடனேனும் இச்சந்தர்ப்பத்தில் தூரமானதாகக் கருதப்படும் குறுகிய கலந்துரையாடல் ஒன்றினூடாக இக்கருத்தாடலை ஆரம்பிப்போம்.

## நாகரிகங்களுக்கிடையிலான மோதல்

நாகரிகங்களுக்கிடையிலான மோதல் தொடர்பான கருத்து முதன்முறையாக 1993 காலப்பகுதியில் சாமுவேல் ஹங்டிங்டன் என்பவரால் 'Foreign Affairs' என்ற இதழுக்காக எழுதப்பட்ட 'The Clash of Civilization' என்ற ஆக்கத்திலேயே முன்வைக்கப்பட்டது. பின்னர், அவரால் அவ்வாக்கம் புத்தகமாக மெருகூட்டப்பட்டு 1996இல் வெளியிடப்பட்டது. 'உலக அரசியல் புதியதொரு கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளது' என்று கூறியே அவர் தனது ஆக்கத்தை ஆரம்பிக்கின்றார். அவரால் இந்த வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது பனிப்போர் முடிவுக்கு வந்த சந்தர்ப்பமொன்றிலாகும். 1991 இல் அவருடைய மாணவராகவிருந்த பிரான்சிஸ் புகுயாமா தனது The End of History and The Last Man என்ற

நூலைப் பிரசுரித்ததன் மூலம் வரலாறு நிறைவு பெற்றுள்ளதாகக் கருத்து வெளிப்படுத்தியுள்ளார். பனிப்போர் இடம் பெற்ற காலப்பகுதியில் உலகத்தில் மோதலானது கருத்தியல் ரீதியிலான இரு வேறுபட்ட தலைமையகங்களுக்கு இடைலேயே இடம்பெற்றது. ஹங்டிங்டன் தனது நாகரிகங்களுக்கு இடையிலான மோதல் தொடர்பான ஆய்வுக் கட்டுரையினை முன்வைப்பது இம்மோதல் நிறைவு பெற்றதொரு சந்தர்ப்பத்திலாகும். அவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

> “இந்த நவீன உலகில் மோதலினுடைய தோற்றுவாய் கருத்தியல் மற்றும் பொருளாதாரம் சார்ந்ததல்ல என்பது எனது கருதுகோளாகும். (இந்த யுகத்தில்) மனித இனத்துக்கிடையில் சக்தி வாய்ந்ததொரு பிரிவினையை ஏற்படுத்துவதும் மோதல்களுக்கான பிரதான மூலகாரணியாக விளங்குவதும் கலாசாரமாகும். நாகரீகங்களுக்கு இடையிலான மோதல் உலக அரசியலில் முதன்மைக் காரணியாக அமைந்துள்ளது.” (ஹங்டிங்டன் 1993:22)

அவர் உலகத்தை ஒன்பது நாகரிகங்களாகப் பிரித்துக் காட்டியுள்ளார்.




மேற்கத்தேயம் — இஸ்லாம் — ஹிந்து — லத்தீன் அமரிக்கா
பழமைவாதம்(*Orthodox*) — பௌத்தம் — ஆபிரிக்கா — சீனா
ஜப்பான்

பிரதானமான அரசியல் மோதல் தோற்றம் பெறுவது மேற்குலக மற்றும் மேற்குலகல்லாத நாகரிகங்களுக்கிடையிலேயே என அதில் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்போது இஸ்லாமிய நாகரிகத்தை ஏனைய நாகரிகங்களைவிட எதிர்மறையானதொரு மனப்பாங்குடன் கலந்துரையாடுகின்றார்.

அவரது முன்வைப்பின்படி மேலைத்தேயம் தனியானதொரு நாகரிகத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, கனடா, மேற்கு மற்றும் மத்திய ஐரோப்பா மற்றும் ஓசனியா

ஆகியன மேலைத்தேய நாகரிகத்துக்குட்பட்ட நாடுகளாகும். இந்நாகரிகம் கிறிஸ்தவம், அறிவொளிக்காலம், கைத்தொழில் மயமாக்கம் மற்றும் நவீனமயமாக்கம் என்பவற்றின் ஊடாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இம்மேலைத்தேய நாகரிகத்துக்கு முழுமையாக மாற்றமான நாகரிகமாக இஸ்லாமிய நாகரிகத்தை அவர்கள் நோக்குகின்றனர். பேர்னாட் லெவிஸ் என்பவருக்கேற்ப ஹங்டிங்டன் கருதுவதாவது அடுத்துவருகின்ற உலக ஒழுங்குக்கான போர் ஏற்பட்டிருப்பது மேலைத்தேய நாகரிகம் மற்றும் இஸ்லாமிய நாகரிகம் என்பவற்றுக்கிடையிலாகும். இம்மோதலை சிலுவைப்போர் காலகட்டம் வரையில் பரவலடைந்த 1300 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கள் பழைமை வாய்ந்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.

“இது நாகரிகங்களுக்கிடையிலான மோதலன்றி வேறெதுவுமில்லை... இது யாதெனில் எமது பண்டைய போட்டித் தன்மையான யூத-கிறிஸ்தவப் பாரம்பரியத்துக்கும், எமது மதச்சார்பற்ற நிகழ்காலத்திற்கும், அத்துடன் அவையிரண்டினதும் உலக பரிமாணப் பரவலுக்கும் எதிரான எதிர்வினையாகும்.” (லெவிஸ் 1992:28)

இங்கு உருப்பெறுகின்ற ஆய்வுக் கட்டுரைக்கேற்ப மேலைத்தேய நாடுகள் அனைத்தும் இத்தகைய கிறிஸ்தவ கடந்தகாலப் பாரம்பரியம், நவீனத்துவம், அறிவொளிக்காலம், கைத்தொழில் மற்றும் மதச்சார்பின்மை ஆகியவற்றினைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. நாகரிகங்களுக்கிடையில் கடுமையான மோதல் ஏற்படுவது அதன் குணாம்சங்களைத் தாங்கியுள்ளவரும் அதன் பாதுகாவலருமாகிய மேலைத்தேய மற்றும் இஸ்லாமிய நாகரிகங்களுக்கிடையில் இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் மேலைத்தேய நாடுகள் கொண்டுள்ள மேலைத்தேயப் பெறுமதிக்கு எதிரான கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கருதும்நிலை ஏற்படுகின்றது. இந்த ஆய்வுக் கட்டுரைக்கேற்ப தமது நம்பிக்கைக்கு ஒத்துப்போகாதவர்களை கீழ்த்தரமான முறையில் கொலை செய்தல், தமது சமயத்தின் குறிக்கோள்களுக்குப் புறம்பான கலைப்படைப்புக்கள் மற்றும் வரலாற்றுப் பாரம்பரியங்களை அழித்தல் ஆகிய செயற்பாடுகளை நாகரிகங்களுக்கிடையிலான மோதல் என்ற கருத்துருவாக்கத்தில் அமைத்துக்கொள்ள முடியும். ஆயினும் இந்தக் கருத்துருவாக்கத்தில் காணப்படுகின்ற அரசியல் நம்மால் புறக்கணிக்கப்படக் கூடாது.

## முடிவுறாத பனிப்போர்

ஹங்டிங்டனுடைய ஆய்வுக்கட்டுரை பனிப்போருடைய நிறைவுடன் கட்டியெழுப்பப்படுகின்ற நவீன உலக அரசியலுக்குள்ளான மோதல்களின் இயல்பு எத்தகையதாகவிருக்கும் என்ற பிரச்சினைக்குப் பல்வேறுபட்ட நபர்களால் வழங்கப்பட்ட பதில்களை உள்ளடக்குகிறது. இது முடிவுறாதவொரு பனிப்போரை நம்பியதொரு உலகத்தினால் அதனைத் தொடரும் வகையில் அதேபோன்று முடிவுறாத இன்னுமொரு மோதல் தொடர்பான கருத்துருவாக்கத்துக்காக மேற்கொள்ளப்பட்டதொரு முயற்சியாகும். எட்வட் சய்த் என்பவரின் கருத்தின்படி அது கருத்தியல் சார்ந்த யுத்தத்தின் முடிவில் மேற்குலகினால் பனிப்போர் முழுவதிலும் பராமரிக்கப்பட்ட மேற்கத்தேய மீயுயர் தன்மையை மீண்டும் வேறுபட்டதொரு முறையில் நிலைநிறுத்தும் பொருட்டு வித்தியாசமானதொரு மோதலை மீளுருவாக்கம் செய்வதாகும். இதன் மூலம் மீண்டும் மேற்கத்தேய மீயுயர் தன்மையை நிரூபிப்பதற்கான வாய்ப்புக் கிடைப்பதுடன், மேலைத்தேய அரசியல் செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கான வாய்ப்பும் மீண்டும் ஒருமுறை கிட்டுகிறது. ஹங்டிங்டனுடைய ஆய்வுக் கட்டுரையின்

முடிவில் அவரால் மேற்கத்தேய மீயுயர் தன்மையைப் பாதுகாக்கும் வகையில் மேலைத்தேயத்தினால் பின்பற்றப்படவேண்டிய அரசியல்சார் வியூகங்கள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருப்பதானது அதனை மேலும் உறுதிப்படுத்துகிறது.

> "...அவர்களும் சுயாதீன சம்பிரதாய பண்பாடுகள் மற்றும் விழுமியங்களுடன் நவீனத்துவத்தை இணைப்பதற்கு முயற்சி செய்துள்ளனர். மேற்குலகுக்கு ஒப்பான வகையில் அவர்களது பொருளாதார மற்றும் இராணுவ இயலுமைகள் விருத்தியடைந்துள்ளன. அதனால் சுயாதீனமான அதிகாரச் செயற்றிட்டங்கள் மேலைத்தேயத்துடன் ஒத்துப் போயுள்ளதாக அமைகின்றன. இருப்பினும், அதன் பெறுமானங்கள் மேற்குலகைவிட பாரியளவு மாற்றங்களைக் கொண்டதும் மேற்கத்தேயம் அல்லாததுமான நவீன நாகரிகங்களுடன் மேற்குலகு இணைந்து செயலாற்ற வேண்டி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்நாகரிகங்கள் தொடர்பில் தமது விருப்பங்களை பேணிப்பாதுகாக்கும் பொருட்டு மேற்குலகினால் அவர்களது பொருளாதார

மற்றும் இராணுவப் பலத்தைத் தொடர்ச்சியாகக் கொண்டுசெல்ல வேண்டியிருக்கின்றது.” (ஹங்டிங்டன் 1993:49)

எட்வர்ட் சய்த்தின் கருத்துக்கேற்ப, இங்கு பரிந்துரை செய்யப்படுவது வேறொரு வகையில் பனிப்போரை மீண்டும் கொண்டு நடாத்துவதாகும். அதனூடாகப் பனிப்போர் காலத்தில் போன்று மேற்குலகினரால் மேற்கொள்ளப்படுகின்ற சகல தலையீடுகள், அழுத்தங்கள் மற்றும் நன்மைகளில் பாதுகாவலனாக நிற்றல் என்பனவற்றில் மேற்கத்தேயம் முன்னிற்பது நியாயப்படுத்தப்பட்டுள்ளது.

ஹங்டிங்டன் கருத்தாக்கம் செய்கின்ற மேற்குலகம் மற்றும் உண்மையிலேயே நிலைபெற்றுள்ள மேற்குலகம் ஆகிய இரண்டுக்குமிடையில் பாரிய இடைவெளியொன்று காணப்படுகின்றது. இவர் மேற்கத்தேய நாகரிகத்துக்குரியதாகக் கருதுகின்ற புவிசார் அரசியல் அலகுகளுக்குள் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய அளவுக்கு இஸ்லாமியப் பண்பாடு உள்ளடங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக அவரால் மேற்கத்தேயம் மற்றும் மத்திய ஐரோப்பா ஆகியன மேற்கத்தேய நாகரிகத்துக்குரிய

பிராந்தியமாக வகைப்படுத்தப்படும் போது ஜேர்மனில் உள்ள பாரியளவு துருக்கி மற்றும் பாகிஸ்தான் குடித்தொகை, பிரான்சில் உள்ள அதிகளவு வடஆபிரிக்கக் குடித்தொகை, சுவீடன் அல்லது சுவிட்ஸர்லாந்தின் முஸ்லிம் குடித்தொகை என்பன புறக்கணிக்கப்படுகின்றன. இன்னொரு வகையில் முதிர்ச்சியடைந்த, நவீன, கிறிஸ்தவ நாகரிகத்தின் கேந்திர மையத்தில் அமைந்துள்ள நாடுகள் ஏற்படுத்திக் கொண்டுள்ள நாகரிகத்துக்கு எவ்வகையிலும் பொருந்தாத செயற்பாடுகளை அவர் புறக்கணிக்கிறார். இதுபற்றிப் பேசியுள்ளதால் அஸாத் கூறுவது யாதெனில், ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் துருக்கியை உள்ளடக்குதல் தொடர்பான கருத்தாடலில் முன்வைக்கப்பட்ட வாதமே ஐரோப்பிய நாடுகள் தொடர்பில் உள்ளடக்கப்படமாட்டாது என்பதாகும். அதாவது அதன் வேர்கள் ஆசியாவுடையதாக அமைந்துள்ள துருக்கியினரை ஐரோப்பாவுக்குள் உள்ளடக்குவதினூடாக ஐரோப்பிய நிலை குலைக்கப்படும் என்று கூறப்படுகின்ற போது இரண்டாவது உலக மகாயுத்தத்தில் பாரிய இனப்படுகொலைகளை மேற்கொண்ட நாசி

கட்சியினுடைய நாடாகிய ஜேர்மனி ஐரோப்பாவுக்குள் அமைந்துள்ளமை அதன் ஐரோப்பிய நிலைக்கு சிக்கலாகக் கருதப்படுவதில்லை என்பதாகும். (அஸாத் 2003: 161- 162). இன்னொரு வகையில் நாசி கட்சியினரூடாக பாரிய யூத இனப்படுகொலைகள் மேற்கொள்ளப்படுகின்றபோது அது ஆரிய மற்றும் யூத நாகரிகங்களுக்கிடையிலான மோதலாக எவராலும் வடிவமைக்கப்படவில்லை. மேற்கத்தேய நாகரிகத்துக்குள்ளான மோதல், நவீனத்துவ மோதல், மேன்மைத்துவத்துக்கான மோதல் என்னும் வகைகளிலேயே அது புரிந்துகொள்ளப்பட்டது. அவர்களது ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்குக் காலனித்துவங்களின்போது மேற்கத்தேய நாடுகளினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய மனிதப் படுகொலைகள் அவர்களை மேற்கத்தேய நாகரிகத்துக்குள் உள்வாங்குவதற்கு சிக்கலாக இருக்கவில்லை. ஆயினும், துருக்கி, ஆர்மேனியாவில் மேற்கொண்ட படுகொலைகள் அவர்களை ஐரோப்பாவுக்குள் உள்வாங்கும்போது அவர்களது ஐரோப்பிய நிலையினைக் கேள்விக்குறியாக்குகின்ற ஒரு காரணியாக முன்வைக்கப்பட்டுள்ளது. இதனூடாகத் தென்படுகின்ற விடயம் யாதெனில்,இந்த

மேற்குலகினை, முஸ்லிம் அல்லது ஏனைய நாகரிகங்களிலிருந்து பாகுபடுத்தி முன்வைத்தல் தெளிவான அரசியல் பாகுபாடுகளாகும் என்பதாகும்.

## வகுப்பாக்கம் என்பது அப்பாவித்தனமானதல்ல

நாம் நன்கு அறிந்துள்ளவாறு ஹங்டிங்டன், நாகரிகமென மாறாநிலை உருப்படிவத்திலான வகுப்பாக்கத்தை மேற்கொண்டுள்ள பிராந்தியங்களில் எத்தனையோ பன்மைத்துவங்கள், சிக்கல் தன்மைகள் மற்றும் பிரிவுகள் நிலவுகின்றன. பேர்லின் பிரதேசத்தில், டர்பன் அல்லது ஒஸ்லோ பிரதேசத்தில் பாரியளவில் மக்கள் பங்களிப்புடன் நடாத்தப்படுகின்ற இந்து மற்றும் இஸ்லாம் சமய வைபவங்கள் மற்றும் ஊர்வலங்கள் பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? மேற்குலக நாகரிகத்துக்கு உரித்தானதாகக் கூறப்படுகின்ற மத்திய ஐரோப்பிய நாடுகள் (ஹங்கேரி, செக் குடியரசு, போலந்து மற்றும் குரோஷியா) அந்த நாடுகளில் ஐரோப்பிய நிலையினைக் கேள்விக்குறியாக்கி செயல்படுத்தியிருப்பது பண்பாட்டுக்காரணமொன்றின் பேரிலா? முற்றுமுழுதாக இஸ்லாத்தில் அதிகளவு ஆன்மீக அறிவு கொண்ட வடிவமைப்பாகிய சூபி இஸ்லாம் இன்று மேற்கத்தேயர்களினால் மாறாநிலை

உருப்படிவத்திலான இஸ்லாத்தினைவிட பௌத்த மெய்யியலுடன் நெருக்கமானது என்று ஒருவரால் விவாதிக்க முடியாதா?

எம்மைப் பற்றியே ஹங்டிங்டனுடைய வகுப்பாக்கத்திலிருந்து எடுத்துக்காட்டொன்றை எடுப்போமாயின் அது எவ்வளவு யதார்த்தமற்றது என்பதனை அது பிரதிபலிக்கிறது. அவர் பௌத்த நாகரிகம் என்ற வகுப்பாக்கத்திற்குள்ளேயே இலங்கையை வைத்து நோக்குகின்றார். அவர் இதற்குள் உள்ளடக்குகின்ற ஏனைய நாடுகளாவன பூட்டான், காம்போடியா, மியன்மார், மொங்கோலியா மற்றும் தாய்லாந்து ஆகியனவாகும். ஒரு வகையில் இலங்கை இந்தியாவுக்கு மிகவும் அருகில் இருப்பதுடன் இன்னொரு வகையில் மேற்குலகுடன் மிகவும் நெருக்கமாகவும் உள்ளது. அது மொங்கோலியாவுடன் அல்லது பூட்டானுடன் பரிமாறிக்கொள்கின்ற பண்பாடுசார் பொதுத்தன்மையொன்று காணப்படுமாயின், அது குறைந்தளவிலான காரணங்கள் தொடர்பானதாக மாத்திரமே இருக்க முடியும்.

அதனடிப்படையில் இஸ்லாம் வேறுபட்டதொரு நாகரிகமாக மாறாநிலை உருப்படிவத்தில் மேற்குலகுடன் நாகரிக மோதலொன்றில் ஈடுபடுவதாக உருவமைக்கப்படுகின்ற ஆய்வுக்கட்டுரை எவ்வளவு பலவீனமானதொன்று என்பது தெளிவாகிறது. அது மேற்குலக அறிவியல் கருத்தாடல்களில் தொடர்ச்சியான விமர்சனங்களுக்கு உட்பட்டுள்ளது. அதேபோன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு மேற்கத்தேய வெகுசன ஊடகமும் நேரடியாக நிகழ்கால ISIS அல்லது வேறொரு இஸ்லாமியத் தீவிரவாதமொன்றை நாகரிகங்களுக்கிடையிலான மோதலொன்றாக வெளிப்படையாக வெளிப்படுத்த மாட்டார்கள். ஆயினும் ஹங்டிங்டன் என்பவர் ஐக்கிய அமெரிக்கக் குடியரசினுடைய அரச திணைக்கள ஆலோசகராவார். அவர் வியட்னாம் யுத்தத்திலும், பனிப்போர் காலம் மற்றும் பனிப்போருக்குப் பிந்திய காலத்திலும் அரச திணைக்களத்துக்கான மூலோபாய ஆலோசனைகளை வழங்கியுள்ளார். நாகரிகங்களுக்கிடையிலான மோதல் தொடர்பான அவரது கருத்துருவாக்கமானது முதன்முறையாக அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கைகள் மற்றும் சர்வதேச தொடர்புகள் பற்றிய Foreign Affairs

என்ற சஞ்சிகையிலேயே பிரசுரிக்கப்பட்டது. இதன்படி ஹங்டிங்டனுடைய சிந்தனைகள் நடைமுறையில் எந்தளவுக்குச் செல்வாக்குப் பெறுகின்றன என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றது. ஹங்டிங்டனுடைய நாகரிகங்களுக்கிடையிலான மோதல் தொடர்பான எண்ணக்கரு கல்வி நிறுவனங்களில் இன்றைக்கு பலவீனமடைந்துள்ள போதிலும் அதிகார அரசியலுக்குள் அது மென்மேலும் வலுப்பெற்றதொரு கருத்தியலாகக் காணப்படுகிறது. நடுநிலையானவை என்று கருதப்படுகின்ற மேலைத்தேய வெகுசன ஊடகங்களும் அதனைத் தமது பயன்பாட்டினுள் வெளிப்படுத்தாது அந்த மனப்பாங்குகளைப் பிரதிபலிக்கின்றன. இன்னொரு வகையில் அதனை நாகரிக மோதலாகப் பிரதிபலிப்பதற்கு இஸ்லாமியத் தீவிரவாதிகளும் ஆவலாக உள்ளனர். அது, இந்த இஸ்லாமிய நாகரிகம் என்ற மாறாநிலை உருப்படிவத்தினுள் பாரியதொரு பன்மைத்துவம் மற்றும் உள்ளக முரண்பாடுகளுடன் காணப்படுகின்ற இஸ்லாமிய உலகின் ஏகபிரதிநிதியாகத் தங்களைப் பிரதிபலிப்பதற்கு அதன்மூலம் அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகின்றமையினாலாகும். இலங்கையிலும் மேற்கத்தேய எதிர்ப்புவாத அரசியல்

சிந்தனைகளைத் தாங்கியுள்ள அதிகளவானோர் இந்த மேற்கத்தேய மூலோபாயக் கருத்தாக்கத்தினை ஏற்றுக் கொண்டுள்ளனர். முரண்பாடான வகையில் அவர்களும் நவீனத்துக்கு விரோதமான, அறிவு ஞானத்துக்கு விரோதமான மற்றும் மதச் சார்பின்மைக்கு விரோதமான (கழுத்தை வெட்டுகின்ற, பிள்ளைகளைத் துஷ்பிரயோகம் செய்கின்ற, கல்வி மற்றும் கலையினைப் பகிஷ்கரிக்கின்ற) நாகரிகத்திற்கு உரித்தான மாறாநிலை உருப்படிவத்திலான குழுவினர் என்ற நோக்கிலேயே முஸ்லிம்களைப் பார்க்கின்றனர். ஏப்ரல் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் பிரபல மட்டத்தில் கருத்தாடப்பட்டவையும் இவ்விடயங்களே ஆகும். அதற்கு முன்னர் 2014 ஜூன் மாதத்தில் அளுத்கம நகரிலும்[2], 2018 மார்ச் மாதம் திகன பிரதேசத்திலும்[3] முஸ்லிம்களுக்கு

---

